தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 1-6-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**சர்வதேச மண்வள ஆண்டை முன்னிட்டு பள்ளி சிறுவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி**

தமிழ்நாடு வேளாண் பல்கலைகயின் நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாமானது கோவையில் கிணத்துக்கடவு தாலுக்கா அருகேயுள்ள சொக்கனூர், முத்துக்கவுண்டனூர், சட்டக்கல்புதூர் மற்றும் வீரப்பக்கவுண்டனூர் ஆகிய கிராமங்களில் மே 23ம் தேதி முதல் 29ம் தேதி வரை ஏழு நாட்கள் நடைபெற்றது. இதையொட்டி வேளாண் தொழில்நுட்ப விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பேரணிகள், மருத்துவ முகாம், தூய்மைப்படுத்துதல் போன்ற பணிகள் நிறைவேற்றப்பட்டது.

உணவு மற்றும் வேளாண் கழகம் 2015ம் ஆண்டை மண் வள ஆண்டாக அறிவித்துள்ளது. அதனையொற்றி வேளாண் பல்கலையில் உள்ள மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறையில் சர்வதேச மண் வள ஆண்டு 2015ஐ முன்னிட்டு சிறப்புரைகள், கருத்தரங்குகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பேரணிகள் ஆகியவை திட்டமிடப்பட்டுள்ளன. மண் அரிப்பு, மண்ணில் குறைந்த கரிமச் சத்து உள்ளதால் நுண்ணுயிர்கள் செயலாற்ற முடியாத நிலை, மண்ணில் ஏற்பட்டுள்ள பௌதீக மற்றும் வேதியியல் குறைபாடுகள், தவறான இடுபொருட்களினால் மேலாண்மையில் ஏற்படக்கூடிய பாதிப்புகள், நிலத்தடி நீர் குறைபாடு மற்றும் மாசடைதல், பாசன நீரில் உப்புக்கள் அதிகமாதல் போன்ற பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாலும், வேளாண்மைக்கு மட்டுமின்றி அனைத்து ஜீவராசிகளுக்கும் மண் மிகவும் இன்றியமையாதது என்பதாலும் அடுத்த 10 ஆண்டுகளில் உணவு உற்பத்தி 450 மில்லியன் மெட்ரிக் டன்னாக உயர்த்தப்பட வேண்டும் என்பதால், அதற்கு மண் வளம் மிகவும் இன்றியமையாதது என்பதால் ரோம் நகரிலுள்ள உணவு மற்றும் வேளாண் கழகம் 2015ம் ஆண்டை சர்வதேச மண் வள ஆண்டாக அறிவித்துள்ளது.

இதில் விவசாயிகளுக்கு தொழில்நுட்பங்களைப் பற்றி விளக்குவதோடு பள்ளி சிறுவர்களிடத்திலும் விழிப்புணர்வு கொண்டு வர மண் மற்றும் வேளாண் வேதியியல் துறை திட்டமிட்டுள்ளது. இதையொட்டி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நாட்டு நலப்

பணித்திட்ட (என்.எஸ்.எஸ்) முகாமில் நடந்த சிறப்பு நிகழ்ச்சியில் 3ம் வகுப்பு முதல் 11ம் வகுப்பு வரை பயிலும் 25 பள்ளி சிறுவர், சிறுமியர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மண்ணியல் துறை பேராசிரியர் முனைவர் அ. வடிவேல் அவர்கள் தனது உரையில் கூறியதாவது: மண் பயிருக்கு ஆதாராமாக இருந்து ஊட்டமளிக்கிறது. குப்பைகள் மற்றும் கழிவுகளை மக்கச் செய்கிறது. நீரிலிருந்து மாசுகளை அகற்றி வடிகட்டுகளின் கட்டுமானத்திற்கு பயன்படுகிறது. அனைத்து உயிர்களுக்கும் ஆதாரமாக விளங்குகிறது என்னும் உண்மைகளையும் மண் ஆற்றும் ஐந்து முக்கிய வகைகளையும் மாணவர்களுக்கு எடுத்துக் கூறினார். ஒரு படக்காட்சி மூலம் மண் வகைகள், மண்ணின் செயல்பாடுகள், தவறான மண் பராமரிப்பால் ஏற்படக்கூடிய விளைவுகள் ஆகியவற்றை விளக்கினார்.

மேலும் செயல் விளக்கமாக செம்மண், கரிசல்மண், வண்டல் மண் போன்ற மண் வகைகள் அவர்களுக்கு காட்டப்பட்டன. மண் நயம் குறித்தும் விளக்கப்பட்டது. மணற்பாங்கான மண், களிமண், குறுமண் ஆகியவை ஒருங்கிணைந்த மண்ணில், நீர் ஊடுருவும் தன்மை எவ்வாறு மாறுபடுகிறது என்று செய்து காண்பித்தனர். மேலும் சுண்ணாம்பு பாங்கான மண், சுண்ணாம்புத்தன்மை இல்லாத மண்ணில் ஹைட்ரோகுளோரிக் அமில பரிசோதனை செய்து சுண்ணாம்புத் தன்மை உள்ள மண்ணை அமிலம் ஊற்றும்போது பொங்குதல் ஏற்படுவதை வைத்து கண்டறிதல், மண் நயத்தை நறநறப்பு, வழவழப்பு, பிசுபிசுப்பு போன்ற தன்மையுள்ள மண்களை காட்டி விளக்கப்பட்டது.

நிகழ்ச்சியை நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் மற்றும் மண்ணியல் துறை உதவிப் பேராசிரியை முனைவர். மு.ரா. லதா ஏற்பாடு செய்தார். நிகழ்ச்சியில் பேராசிரியர்கள், த. வசந்தி, எம். ஆர். பாக்கியவதி மற்றும் உதவிப் பேராசிரியர் ம. கோபாலகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றனர்.

தொடர்ந்து 300 நாட்டு நலப்பணித் திட்ட மாணவ, மாணவியர் பங்குபெற்ற சர்வதேச மண் வள ஆண்டு பேரணி வீரப்பகவுண்டனூரிலிருந்து சட்டக்கல்புதூர் வரை நடைபெற்றது. இதில் மாணவர்கள் மண் மாசுபாட்டை தவிர்ப்போம் - மண் அரிப்பைத் தடுப்போம் - இயற்கை வளங்களை பாதுகாப்போம், மண்ணும் நீரும் கண்ணெனத் தகும், மண்ணில்லையேல் உயிரில்லை - மண்ணில்லையேல் உணவில்லை போன்ற பதாகைகளை ஏந்தி முழக்கங்கள் எழுப்பிச் சென்றனர்.

இந்நிகழ்ச்சி மூலம் மண்ணைப் பாதுகாத்தால் தான் அனைத்து ஜீவராசிகளும் நன்றாக வாழ முடியும் என்னும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இன்றைய மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அவர்கள் பொறுப்புள்ள மனிதர்களாக மாறுவார்கள். இயற்கையோடு இணைந்து இயற்கை வளங்களைக் காக்க சிறந்த பங்களிப்பார்கள் என்னும் நோக்கத்தோடு இந்நிகழ்ச்சியை நடத்துவதாகவும், மேலும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் சென்று இந்நிகழ்ச்சியை தொடர்ந்து நடத்தப் போவதாக மண்ணியல் துறை உதவிப் பேராசிரியை மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் முனைவர். மு.ரா. லதா அவர்கள் தெரிவித்தார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்